# பூடான் பிரதமரை சந்தித்தார் பாரத பிரதமர்

மார்ச் 15, 2024

பாரத பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் 14 மார்ச் 2024 அன்று புது தில்லியில் பூடான் பிரதமர் திரு. HE தாஷோ ஷெரிங் டோப்கே அவர்களை சந்தித்தார்.

பிப்ரவரி, 2024 ஆம் ஆண்டில் பதவியேற்ற பின்னர், பிரதமர் திரு. ஷெரிங் டோப்கே அவர்கள் தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்த பயணத்தில் உள்கட்டமைப்பு மேம்பாடு, இணைப்பு, எரிசக்தி, நீர்மின் ஒத்துழைப்பு, மக்கள் பரிமாற்றம் மற்றும் மேம்பாட்டு ஒத்துழைப்பு உள்ளிட்ட இருதரப்பு கூட்டாண்மையின் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் ஆய்வு செய்தனர். மேலும் சிறப்பான மற்றும் தனித்துவமான இந்தியா-பூடான் நட்புறவை வலுப்படுத்துவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

பூட்டானின் வளர்ச்சி முன்னுரிமைகளில் நம்பகமான, உண்மையான மற்றும் மதிப்புமிக்க கூட்டாளியாக இருக்கும் இந்தியாவின் பங்கை பூட்டான் பிரதமர் ஆழமாகப் பாராட்டினார்.

பூட்டான் மன்னர் சார்பாக பிரதமர் திரு. ஷெரிங் டோப்கே அவர்கள், பாரத பிரதமர் திரு. மோடி அவர்களை அடுத்த வாரம் பூட்டான் நாட்டிற்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார். பாரத பிரதமரும் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார்.

**புது தில்லி**
**மார்ச் 15, 2024**